**DEPOSITION OF WITNESS**

**(Chapter XXIII Code of Criminal Procedure)**

**IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE THIRUVIDAIMARUTHUR**

| | | | |
|---|---|---|---|
| Calender | : | | |
| Miscellaneous | : | | |
| Preliminary Register | : DVC.7/2023 | | |
| Sessions | : | | |
| Deposition of Witness for | : PW-1 | Village: | |
| Name | : மர்யம் | Age | :24 |
| Father's/Husband's Name | : முகமதுதஸ்லிம் | Taluk | : |
| Nationality | : Indian | Religion | : |

**Solemnly affirmed in accordance with the provisions of The Oaths Act 1969 on the day of 06.09.2024**

**எதிர்மனுதாரர்கள் தரப்பு குறுக்கு விசாரணை**

எதிர்மனுதாரர்கள் மூவரும் எனது திருமணத்திற்கு வரவில்லை என்றால் 1ம் எதிர்மனுதாரர் மற்றும் எனது மாமனார் திருமணத்திற்கு வந்தார்கள். எனது திருமணத்தை புகைப்படம் மற்றும் வீடியோ எடுத்தார்களா என்றால் எடுத்தார்கள். எனது திருமணத்திற்கு எதிர்மனுதாரர்கள் யாரும் வரவில்லை என்றாலும் நான் வழக்கிற்காக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல. எனது கணவர் வெளிநாட்டில் என்ன வேலை செய்து வந்தார் என்றால் ஓட்டுநராக வேலை செய்து வந்தார். அவரது மாத வருமானம் என்னவென்றால் மாதம் ரூ.20,000/- பெற்று வந்தார். தற்போது என் கணவர் என்ன வேலை செய்கிறார் என்றால் வெளிநாட்டில் ஓட்டுநராக வேலை செய்து மாதம் ரூ.25,000/- சம்பாதித்து வருகிறார். எனது கணவர் 1ம் எதிர்மனுதாரருக்கு தொகை அனுப்பியதற்கான

வங்கி கணக்கு அறிக்கை எதுவும் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். அந்த ஆவணம் என்னிடம் உள்ளது. 1, 2 எதிர்மனுதாரர்கள் குடும்ப சொத்தை எங்களுக்கு தெரியாமல் விற்பனை செய்ததற்கான ஆவணம் எதையும் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. ஆனால் அவர்கள் சொத்தினை விற்பனை செய்துள்ளார்கள். அவர்கள் எந்த தேதியில் என்ன சர்வே எண்ணில் கண்ட சொத்தை விற்பனை செய்துள்ளார்கள் என்றால் சர்வே எண் தெரியவில்லை, கட்டா நகரத்தில் உள்ள சொத்தை விற்பனை செய்துள்ளார்கள். 1, 2 எதிர்மனுதாரர்கள் குடும்ப சொத்தை விற்பனை செய்யவில்லை என்றாலும், நான் வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றாலும் சரியல்ல. எனது கணவரின் தாத்தா பெயர் என்னவென்றால் அப்துல்ரஜாக் ஆகும். எனது கணவர் கும்பகோணம் முதன்மை சார்பு நீதிமன்றத்தில் அசல் வழக்கு எண் 29/2023 ல் பாகப்பிரிவினை வழக்கு தாக்கல் செய்துள்ளார் என்றால் சரிதான். அந்த வழக்கினை தொடர்ந்து நடத்துவதற்கு எனது கணவர் எனக்கு அதிகார ஆவணம் எழுதி கொடுத்துள்ளார் என்றாலும், நான் அதனை நீதிமன்றத்தில் தாக்கல் செய்து உத்தரவு பெற்றுள்ளேன் என்றாலும் சரிதான். மேற்படி வழக்கு பற்றிய விவரம் அனைத்தும் எனக்கு தெரியும் என்றால் சரிதான். நான் இம்மனுவில் குடியிருக்க அனுமதி கோரியுள்ள சொத்து மேற்படி பாகப்பிரிவினை வழக்கில் தாவா சொத்தாக காட்டப்பட்டுள்ளது என்றால் சரிதான். மேற்படி பாகப்பிரிவினை வழக்கில் உள்ள சொத்துக்களில் எனது கணவருக்கு பாகம் உள்ளது போல மற்ற வாரிசுதாரர்களுக்கும் பாகம் உண்டு என்றால் சரிதான். மேற்படி பாகப்பிரிவினை வழக்கில் எனது கணவருக்கு பாகம் ஒதுக்கப்பட்டால் அதில் குடியிருந்து வருவதற்கு எனக்கு ஆட்சேபனையில்லை என்றால் சரிதான். தற்போது நீதிமன்றத்தில் காட்டப்படும் வழக்குரைதான் எனது கணவரால் மேற்படி அசல் வழக்கில் தாக்கல் செய்யப்பட்டுள்ள வழக்குரையாகும். ( மேற்படி வழக்குரை சார்வு செய்யப்பட்ட நகல்

**எ.சா.ஆ.1** ஆக குறியீடு செய்யப்படுகிறது). திருமணம் முடிந்த நாள்முதல் எனக்கும் எதிர்மனுதாரருக்கும் சுமூகமான உறவில்லை என்பதால்தான் கும்பகோணம் அனைத்து மகளிர் காவல் நிலையத்தில் புகார் அளித்துள்ளேன் என்றால் சரியல்ல. எனது மாமனார் உயிருடன் இருந்த வரை நல்ல முறையில்தான் இருந்தேன். நான் மதம்மாறிய பெண் என்பதால் 2ம் எதிர்மனுதாரருக்கு என்னை பிடிக்கவில்லை. அதனால் எனது மாமனார் இறந்த பிறகுதான் பிரச்சனை ஏற்பட்டது. குடும்ப சொத்தில் கூடுதலாக நாங்கள் பங்கு கேட்டு அதனை எதிர்மனுதாரர்கள் ஒப்புக்கொள்ளவில்லை என்பதால் பொய்யான விவரங்களின் அடிப்படையில் , இம்மனுவினை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. 26.02.1976 ம் தேதி எனது கணவரின் தாத்தா அப்துல்ரஜாக் எனது மாமனார் குப்பகனி மற்றும் பேரன்கள் பேரில் செட்டில்மெண்ட் ஆவணம் எழுதி வைத்துள்ளார் என்றால் சரிதான். நான் மனுவில் சொல்லி உள்ளவாறு எதிர்மனுதாரர்கள் என்னை எந்தவித கொடுமையும் செய்யவில்லை என்றாலும் நாங்கள் கூடுதலாக சொத்து கேட்டு எதிர்மனுதாரர்கள் கொடுக்கவில்லை என்பதால் அவர்கள் மீது பொய்யாக இம்மனுவினை தாக்கல் செய்துள்ளேன் என்றாலும் சரியல்ல.

என் முன்னால் எதிரியின் முன்னிலையில் சாட்சியம் அளிக்கப்பட்டு, கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, படித்துக்காட்டப்பட்டு சரியானதென்று ஏற்கப்பட்டு கையொப்பம் செய்தார்.

**ஒப்பம்/- நா. சிவபழனி,**
**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்,**
**திருவிடைமருதூர்.**